DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.34/2023**

**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.12 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 12 | தொழில் | - | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர் | - | திரு.முருகையா | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | சடையப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 62/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-04-2025</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து 30-11-2023-ம் தேதி பணிஓய்வு பெற்றுவிட்டேன். 25-05-2023-ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவந்த சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண் 22/2023, சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச-வின் படி வழக்கு பதிவுசெய்தேன். **(நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**பின்னர் 13.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடமான சங்கிலிரோடு பேக்டரி டிவிசன் ராஜாராம் வீட்டின் முன்பு சாட்சிகள் சுதர்சன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் 14.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு ராஜாராம் வீட்டின் முன்பு சுமார் 22.2 செ.மீ நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய ஸ்டீல் கத்தி ஒன்றை மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் சுப்பிரமணியன், பவித்ரா , முருகன் த/பெ. செல்வராஜ்,நந்தினி, சரஸ்வதி, பூராஜன், வசந்தா, சிவராமன், சுதர்சன் மற்றும் முருகன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எனது புலன் விசாரணையின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவரவே எதிரியை தேடிச்சென்றபோது எதிரி தர்மலிங்கம் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சரணடைந்ததால் அவர்மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் வழக்கு சொத்தான கத்தியை படிவம் 91-ன்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(அந்த படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக (P.R.NO.36/2023) குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசா1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. அன்னபூரணி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். இத்துடன் புலன் விசாரணை முடித்து 13-06-2023-ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச-வின் படி நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வால்பாறை அரசு மருத்துவனையில் இருந்து தகவல் எவ்வாறு கிடைத்தது என்றால் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அருகில் வால்பாறை காவல் நிலையம் இருப்பதால் அங்கு தகவல் கொடுக்கப்பட்டு வால்பாறை காவல் நிலையத்திலிருந்து ஷேக்கல்முடி காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் கிடைத்தது. வால்பாறை காவல் நிலையத்திலிருந்து யார் தகவல் சொன்னது யார் ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் தகவல் பெற்றது என்றால் ஷேக்கல்முடிகாவல் நிலையத்திலிருந்து தகவலை நான் தான் பெற்றேன். வால்பாறை காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னது யார் என்று தற்போது நினைவில் இல்லை. வால்பாறை அரசு மருத்துவமனையில் யார் யார் இவ்வழக்கில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தது என்றால் சுப்பிரமணி மட்டும் இருந்தார். எனக்கு எந்த தேதியில் எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது, எத்தனை மணிக்கு நான் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 25-05-2023-ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் வால்பாறை அரசு மருத்துவமனை சென்று வாக்குமூலம் பெற்று மீண்டும் ஷேக்கல்முடி காவல் நிலையத்திற்கு வந்து அன்றைய தினமே 11.45 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். எதிரி அன்றைய தினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தாரா என்றால் நான் போய் பார்த்தபோது அவர் அங்கு இல்லை. எதிரியிடம் வாக்குமூலம் பதிவு செய்து அதன் அடிப்படையில் சுப்பிரமணி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் ஆமாம். அது பற்றி விவரங்களை சம்பந்தப்பட்ட CD பையிளை பார்த்தால்தான் சொல்லமுடியும். சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 13.15 மணிக்கு அன்றைய தினமே சென்றேன். சம்பவயிடத்தில் யார் யாரை விசாரித்தேன் என்றால் சுதர்சன் மற்றும் முருகன் அகியோர்களை பார்வை மகஜர் சாட்சிகளாகவும், சம்பவ சாட்சிகளாக பவித்ரா, முருகன், நந்தினி, சரஸ்வதி, சுதர்சன், வசந்தா, முருகன் ஆகியோர்களை விசாரித்தேன். பார்வை மகஜர் நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். பார்வை மகஜரை நான் தயார் செய்திருந்தால் பார்வை மகஜரில் மேல் பகுதியில் எனது பெயர் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. பார்வைமகஜரில் ஷேக்கல்முடி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் எஸ்.முருகையா ஆகிய எண்ணால் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்த பார்வை மகஜர் என பார்வை மகஜரில் எழுதியுள்ளேன். எதிரி அ.சா.1 மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் சம்பவயிடம் சென்றுசாட்சிகளை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். யார் யாரை விசாரித்தேன் என்றால் அந்த வழக்குறிய கோப்புகளை பார்த்தால் தான் சொல்லமுடியும். நான் சொன்னது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.